சி.சி.எண். 550/2023. நாள் 10.06.2024

சாட்சி மனுவின் பேரில் திரும்ப அழைக்கப்பட்டு, எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை –

அசா.1.கீதாலட்சுமி , க/பெ. வீரமணி

( எதிரி ஆஜர் )

1. நான் 12ம் வகுப்பு வரை படித்துள்ளேன். புகாரை நான் தான் எழுதிக்கொடுத்தேன். எனது கணவர் சொல்லச்சொல்ல நான் எழுதவில்லை. கல் மண்டபம் அருகே வந்தபோது சம்பவம் நடந்தது. சம்பவ இடத்தில் இருந்து மடவார் வளாகம் ஆர்ச் வரை மின் விளக்குகள் எதுவும்இல்லை என்றால் சரிதான். சமபவ இடத்தில் இருந்து மடவார் வளாகம் ஆர்ச் சுமார் 300 மீட்டர் தூரம் இருக்கும். சம்பவ இடம் ரோட்டில் கிழக்கு பகுதி என்றால் சரிதான். சம்பவ இடத்தில் இருந்து மடவார் வளாகம் ஆர்ச் வரை குடியிருப்பு வீடுகளும், கடைகளும் உள்ளது என்றால் சரிதான்.

2. புகாரில் எதிரி செயினை அறுத்துக்கொண்டு தெற்கில் இருந்து வடக்கு நோக்கி சென்றதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். சம்பவ இடத்தில் மேற்கு பகுதியில் சென்றால் தென்காசி செல்லும் தேசிய நெடுஞ்சாலை உள்ளது என்றால் சரிதான். சம்பவ இடம் அதிகமான போக்குவரத்து நிறைந்த பகுதி என்றால் சரிதான். சம்பவஇடத்தில் உள்ள சாலையை கடக்க சுமார் 2 நிமிடம் அவகாசம் ஏற்படும் என்றால் சரிதான். எதிரியை சுமார் 5, 10 அடி தூரத்தில் வைத்து பார்த்தேன்.

3. எதிரி என்னை பின் தொடர்ந்து வந்ததாக புகாரில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். எதிரியை பின் தொடர்ந்து நானும், எனது மகளும் முனியாண்டி கோவில் வரை சென்றோம். எங்களது சத்தம்கேட்டு அருகில் இருந்த நிறைய நபர்கள் கூடிவிட்டனர். எதிரியை நாங்கள் துரத்தி சென்றதற்கு பின்னர் எந்த திசையில் சென்றார் என்று எனக்கு தெரியாது. சம்பவ இடத்தில் இருந்து எனது வீடு எதிரே அமைந்துள்ளது. அ.சா.5 சங்கர்ராமனை 1/2 மணி நேரத்தில் அழைத்துக்கொண்டு புகார் கொடுக்கச்சென்றேன்.

4. புகார் கொடுக்க சென்ற போது அ.சா.3, சிவக்குமார் என்னுடன் வந்திருந்தார். அ.சா.3, நான் புகார் கொடுப்பது சம்மந்தமாக எனக்கு உதவி செய்தார். மறுநாள் காலை சுமார் 10.00 மணியளவில் போலீசார் காவல் நிலையத்திற்கு வருமாறு அழைத்தனர். காவல் நிலையத்தில் போலீசார் எதிரியை அடையாளம் காட்டினார்கள் என்றால் சரிதான், நானும் எதிரியை அடையாளம் காட்டினேன். சா.பொ.2 முதல் சா.பொ.5 வரையிலானவைகளை போலீசார் என்னிடம் அடையாளம் காட்டினார்கள் என்றால் சரிதான்.

5. சா.பொ.3, புளுகலர்கட்டம் போட்ட சட்டை கிழிந்த நிலையில் இருந்ததா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எதிரியை அடையாளம்காட்டியபோது எதிரிக்கு தலையில் காயம் இருந்ததா என்றால் இல்லை. கத்தியின் கலர் ஆரஞ்சு கைப்பிடி கொண்டது, அதை காவல் நிலையத்தில் வைத்து பார்த்தேன். சம்பவம் இரவு நேரத்தில் நடந்ததனால் எதிரியை குறிப்பிட்டு அடையாளம் காட்ட இயலாது என்றால் சரியல்ல. சந்தேகத்தின் பேரில் காவல் நிலையத்தில் வைக்கப்பட்டிருந்த இந்த எதிரியை போலீசார் கேட்டுக்கொண்டதற்கு இணங்க சம்பவத்தில் ஈடுபட்டதாக பொய்யாக அடையாளம் காட்டினேன் என்றும், சம்பவ இடத்தில் வைத்து எதிரியை நான் பார்க்கவில்லை என்று சொன்னால் சரியல்ல.

6. சா.பொ.2 முதல் சா.பொ.5 வரையிலானவைகளை காவல் நிலையத்தில் வைத்து போலீசாரால் சொல்லிக்கொடுக்கப்பட்டவை என்றும், சம்பவ இடத்தில் வைத்து பார்ப்பதற்கு வாய்ப்பில்லை என்று சொன்னால் சரியல்ல. எதிரி தெற்கு பக்கமாக உடனடியாக ஓட வாய்ப்பில்லை என்றும், போக்குவரத்து நிறைந்த பகுதி என்பதால் நானும் பின்தொடர்ந்து செல்ல வாய்ப்பில்லை என்று சொன்னால் சரியல்ல. கல் மண்டபத்தில் இருந்து பகல் நேரத்தில் பாதையை வடக்கில் இருந்து தெற்காக கடக்கும் போது சாலையின் இருபுறமும் கவனித்து கடக்க வேண்டும் என்றால் சரிதான்.

7. அ.சா.5 ன் ஆலோசனையின் பேரில் புகார் கொடுத்துள்ளேன் என்றும், புகாரில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியாது என்றும் சொன்னால் சரியல்ல. சம்பவம் மடவார் வளாகம் ஆர்ச் அருகே உள்ள பிள்ளையார் கோவிலில்

நடந்ததென்றும், இவ்வழக்கிற்காக கல் மண்டபம் அருகே நடந்ததாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. அ.சா.3, சிவக்குமார் எனக்கு தெரிந்த நபர் என்றால் சரிதான். மணிகண்டபிரபு என்பவர் எனது மகளை பள்ளிக்கு அழைத்துச்செல்லும் ஆட்டோ டிரைவர் என்றால் சரிதான். அவரை எனக்கு 10 வருடமாக தெரியும்.

8. உண்மையான எதிரியை அடையாளம் காட்டவில்லை என்றும், போலீசார் கேட்டுக்கொண்டதற்கு இணங்க சந்தேகத்தின் பேரில் பிடிக்கப்பட்ட எதிரியை தவறாக அடையாளம் காட்டினேன் என்றும், எதிரிக்கும் இந்த வழக்கு சம்பவத்திற்கும் எவ்வித சம்மந்தமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல.